**மழைநீர் சேமிப்போம்""** **பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் ""**

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம்.

நாள் : 31.10.2023

**நகர்மன்ற சாதாரணக் கூட்ட அழைப்பிதழ்**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, சோபகிருது வருடம், ஐப்பசி மாதம் 21-ம் நாள் 07.11.2023ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒம்).பா.ரேணுப்பிரியா,
நகர்மன்ற தலைவர்,
தேனி -அல்லிநகரம் நகராட்சி.

**பொருள் 01:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சியின் வாராந்திர சந்தை தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய சந்தையாகும் இது . சனிக்கிழமைகளில் இச்சந்தை கூடுகிறது . . தேனி நகரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்புறங்களின் தேவையை பூர்த்தி செய்கிறது நகராட்சி வாராந்திர சந்தையில் காய்கறி கடைகள், பெட்டி கடைகள் மற்றும் பலசரக்கு கடைகள் போன்ற பல்வேறு வகையான கடைகள் உள்ளன இது . நகராட்சிக்கு வருமான ஆதாரமாக இருந்து வருகிறது காலப்போக்கில் சந்தை . பகுதியில் மரக்கடைகள் மற்றும் இதர வாடகை கடைகள் அதிகளவு கட்டப்பட்டதாலும், கொரோனா பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு பல்வேறு கடைகள் இடம் மாற்றம் செய்ததாலும், தற்போது, அருகில் உள்ள இந்து அறநிலை துறைக்கு சொந்தமான இடத்தில் வாராந்திர சந்தை குத்தகை அடிப்படையில் செயல்பட்டு வருகிறதுஎனவே .,ஏக்கரில் அமைந்துள்ள வார சந்தை பகுதியில் 5.73 2 ஏக்கரில் சந்தை உள்கட்டமைப்புகளும், மீதமுள்ள இடத்தில் வணிக கடைகள் கட்டி வாடகைக்கு விட்டு வருமானத்தை ஈட்ட தமிழக அரசிடமிருந்து நிதி உதவி பெற்று சந்தையை மேம்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குனர் மூலம் அரசுக்கு கருத்துரு அனுப்ப அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:2958/2023/இ1)**
**தீர்மான எண்**: 597

**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 02:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கர்னல் ஜான் பென்னிகுக் பேருந்து நிலையத்தில் ஓடுதளம் அமைக்க 20 ச.மீ பரப்பளவில் Sidco நிறுவனத்தின் மூலம் இடம் கோரியதற்கு உரிய கட்டணம் தொகை ரூ.1,15,400/-யை செலுத்தி பெற்று கொள்ள கோரி R.C.No.2000/E3-1-2021, நாள் 17.08.2023 கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து இடத்தை பெறுவதற்கு உரிய கட்டணம் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

( **ந.க.எண்.1881 / 2020 / எப்-1)**
**தீர்மான எண்**: 598
**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 03:-**

தேனி - அல்லிநகரம் நகராட்சி ஆண்டு குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **நாளிதழ்** | **பட்டியல் எண்** | **செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விவரம்** | **தொகை** |
|---|---|---|---|---|
| 1 | தினமலர் | எண்: MD 23408684 நாள் : 26-07-2023 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண் : 194/23/செ.ம.தொ.அ/தேனி நாள்: 24.07.2023 | ரூ: 30,844/- |

மேற்கண்ட தொகை ரூ: 30,844/- (ரூ: முப்பது ஆயிரத்தி எண்ணூற்றி நாற்பத்தி நான்கு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1124/2023/அ3)**
**தீர்மான எண்**: 599
**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 04**:-

தேனி - அல்லிநகரம் நகராட்சி ஆண்டு குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விவரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | KAL Publications (Madurai) Private Ltd., தினகரன் | எண்: 3300422595 நாள் : 26.05.2023 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண் : 134 ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம் 2023 நாள்: 25.05.2023 | ரூ: 15,750/- |

மேற்கண்ட தொகை ரூ: 15,750/- (ரூ: பதினைந்தாயிரத்தி ஏழுநூற்றி ஐம்பது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்.1123/2023/அ3**)

**தீர்மான எண்**: 600

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 05**:-

**தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் உள்ள (திண்டுக்கல் பேரூந்து நிறுத்தம்) அருகில் அமைந்துள்ள இருசக்கர வாகனம் காப்பகத்தில் கட்டணம்** வசூலிக்கும் உரிமம் குத்தகை இனத்திற்கு 05.09.2023 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் உள்ள (திண்டுக்கல் பேருந்து நிறுத்தம்) அருகில் இருசக்கர வாகனம் காப்பகத்தில் கட்டணம் | | | |
|---|---|---|---|
| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்ளி தொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு) |
| 1) | R.விக்னேஷ் | - இல்லை - | **ரூ : 8,00,000/-** |
| 2) | R.கோபி | - இல்லை - | **ரூ : 10,30,000/-** |

<u>அலுவலக குறிப்பு</u>:

மேற்கண்ட குத்தகை இனத்திற்கான மூன்றாண்டு குத்தகை காலம் முடிவுற்ற நிலையில் 01-04-2023 முதல் நகராட்சி மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் 10-03-2023, 28-03-2023, 18.04.2023, 06.06.2023, 09.08.2023, மற்றும் 18.08.2023 ஆகிய தேதிகளில் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைவான தொகைக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போது 05.09.2023 பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரிசை எண் : 2-ல் கண்ட திரு. R.கோபி என்பவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ: 10,30,000/- உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். சென்றாண்டு குத்தகை தொகை ரூ.7,93,800/-யை விட ரூ.2,36,200/- கூடுதலாகவும் மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.7,56,600/- ரூ.2,73,400/- கூடுதலாகவும் உள்ளது. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு தற்போது குத்தகை தொகையுடன் 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி குத்தகைதாரரால் கூடுதலாக செலுத்தும் நிலை உள்ளது. மேலும், நகராட்சி மூலம் வசூல் மேற்கொள்ளும் போது குறைவான தொகையே வசூல் ஆவதாலும், பணியாளர் ஊதியம் மற்றும் மின் கட்டணம் உள்ளிட்ட செலவினங்களை கருத்தில் கொண்டு நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 4069 / 2022 / அ-3)**

**தீர்மான எண்**: 601

**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் 06</u>:-

**தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் உள்ள முகப்பு பகுதியில் வடக்கு பக்கம் திறந்த வெளியில் (காலியிடம்) இரு சக்கர வாகனம் நிறுத்தம்** வசூலிக்கும் குத்தகை உரிமம் 15.09.2023 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் உள்ள முகப்பு பகுதியில் வடக்கு பக்கம் திறந்த வெளியில் (காலியிடம்) இரு சக்கர வாகனம் நிறுத்தம்** | | | |
|---|---|---|---|
| **வ. எண்.** | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள்** | **உயர்ந்தபட்ச ஏலக்கேள்ளி தொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு)** | **ஒப்பந்தப்புள்ளிதொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு)** |
| 1) | R கௌதம் | - இல்லை - | **ரூ : 4,05,000/-** |
| 2) | G.வித்யா | - இல்லை - | **ரூ : 1,40,000/-** |
| 3) | R.P.அய்யர் | - இல்லை - | **ரூ : 3,95,000/-** |

<u>அலுவலக குறிப்பு</u>:

மேற்கண்ட குத்தகை இனம் கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்திற்குள் போக்குவரத்து நெரிசல் காரணமாக பேருந்து நிலையத்தில் முகப்பு பகுதியில் வடக்கு பக்கம் திறந்த வெளியில் (காலியிடம்) இருசக்கர வாகன நிறுத்தம் செய்வதற்கு நகர்மன்ற தீர்மான எண். 549 நாள் 23.08.2023 மன்றம் நிறைவேற்றப்பட்டு மூன்று முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப் பட்டதில் எவரும் கோர முன் வரவில்லை. தற்போது 15.09.2023 பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரிசை எண் : 1-ல் கண்ட திரு. R கௌதம் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ:4,05,000/- உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட குத்தகை இனத்திற்கு தற்போது குத்தகை தொகையுடன் 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரியுடன் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.3066/2023/அ3)**

**தீர்மான எண்**: 602

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் 07</u>:-

**தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் உள்ள (மதுரை பேரூந்து நிறுத்தம்) அருகில் அமைந்துள்ள கட்டண கழிப்பறை** வசூலிக்கும் உரிமம் குத்தகை இனத்திற்கு **05.09.2023** அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் உள்ள (மதுரை பேரூந்து நிறுத்தம்) அருகில் கட்டண கழிப்பறை** | | | |
|---|---|---|---|
| **வ. எண்.** | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள்** | **உயர்ந்தபட்ச ஏலக்கேள்ளி தொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு)** | **ஒப்பந்தப்புள்ளிதொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு)** |
| 1) | P.பாலகருப்பு | - இல்லை - | **ரூ : 10,50,000/-** |
| 2) | B.தங்கப்பெருமாள் | - இல்லை - | **ரூ : 12,80,000/-** |

<u>அலுவலக குறிப்பு</u>:

மேற்கண்ட குத்தகை இனத்திற்கான மூன்றாண்டு குத்தகை காலம் முடிவுற்ற நிலையில் 01-04-2021 முதல் முன் வைப்புத்தொகை செலுத்தி தற்போது வரை ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. 01.04.2021 முதல் துறை ரீதியாக நகராட்சி மூலம் வசூலிக்கப்பட்டு வந்தது.

| | |
|---|---|
| **01.04.2021 முதல் 31.03.2022 வரை** | **ரூ.5,47,500/-** |
| **01.04.2022 முதல் 31.03.2023 வரை** | **ரூ..5,29,250/-** |

இந்நிலையில் 15.09.2023 பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரிசை எண் : 2-ல் கண்ட திரு. B.தங்கப்பெருமாள் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ: 12,80,000/- உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட குத்தகை இனத்திற்கு தற்போது குத்தகை தொகையுடன் 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி குத்தகைதாரரால் கூடுதலாக செலுத்துவார். இந்த ஏலத்தொகை கடந்த ஆண்டுகளை காட்டிலும் கூடுதலாகும். மேலும் நகராட்சி வசூல் தொகையை விட 233% கூடுதலாகும், எனவே மேற்கண்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4070/2022/அ3)**

**தீர்மான எண்**: 603

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் 08</u>:-

**தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் போடி பேரூந்து நிறுத்தம் அருகில் அமைந்துள்ள கட்டணக் கழிப்பறை** வசூலிக்கும் உரிமம் குத்தகை இனத்திற்கு **05.09.2023** அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் உள்ள (போடி பேரூந்து நிறுத்தம்) அருகில் கட்டணக் கழிப்பறை** | | | |
|---|---|---|---|
| **வ. எண்.** | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள்** | **உயர்ந்தபட்ச ஏலக்கேள்ளி தொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு)** | **ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு)** |
| 1) | M.பால்பாண்டி | - இல்லை - | **ரூ : 2,56,000/-** |

<u>அலுவலக குறிப்பு</u> :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கான மூன்றாண்டு குத்தகை காலம் முடிவுற்ற நிலையில் 01.04.2023 முதல் நகராட்சி மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் 10.03.2023, 28.03.2023, 18.04.2023, 06.06.2023, 09.08.2023 மற்றும் 18.08.2023 ஆகிய தேதிகளில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. எவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன் வரவில்லை. தற்போது 05.09.2023 பொது எலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.M.பால்பாண்டி என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,56,000/- கோரியுள்ளார். மேற்கண்ட குத்தகை இனத்திற்கு

தற்போது குத்தகை தொகையுடன் 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி குத்தகைதாரரால் கூடுதலாக செலுத்தும் நிலை உள்ளது. மேலும், நகராட்சி மூலம் வசூல் மேற்கொள்ளும் போது குறைவான தொகையே வசூல் ஆவதாலும், பணியாளர் ஊதியம் மற்றும் மின் கட்டணம் உள்ளிட்ட செலவினங்களை கருத்தில் கொண்டு நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3078/2023/அ3)**

**தீர்மான எண்**: 604

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் 09</u>:-

**தேனி - அல்லிநகரம் நகராட்சி வாரச்சந்தையில் கட்டணம்** வசூலிக்கும் குத்தகை உரிமம் **15.09.2023** அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வாரச்சந்தையில்கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம்** | | | |
|---|---|---|---|
| **வ. எண்.** | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள்** | **உயர்ந்தபட்ச ஏலக்கேள்ளி தொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு)** | **ஒப்பந்தப்புள்ளிதொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு)** |
| 1) | Tவாசிமலை | - இல்லை - | **ரூ : 4,12,000/-** |
| 2) | B.தங்கப்பெருமாள் | - இல்லை - | **ரூ : 10,80,000/-** |

<u>**அலுவலக குறிப்பு**</u> :

கடந்த 2020-ம் ஆண்டிற்கு முன்பு 600 கடைகள் இருந்தன. பெருந்தொற்று கொரோனா பாதிப்பிற்கு பின் ஏறக்குறைய பாதி கடைகள் 310 கொடுவிலார்பட்டி என்ற இடத்திற்கு மாற்றம் செய்து விட்டனர். மேற்கண்ட குத்தகை இனம் 16.10.2020 முதல் தற்போது வரை மூன்று ஆண்டுகளாக பலமுறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் ஏலத்திலோ / ஒப்பந்தப்புள்ளியிலோ கலந்து கொள்ள முன் வரவில்லை. துறை மூலம் நகராட்சி பணியாளர்கள் மூலம் வசூலித்ததில், கடந்த மூன்றாண்டுகளாக கீழே கண்டவாறு வசூலாகியுள்ளது.

| | |
|---|---|
| **16.10.2020 முதல் 31.03.2021 வரை** | **ரூ. 2,94,750/-** |
| **01.04.2021 முதல் 31.03.2022 வரை** | **ரூ.. 7,52,200/-** |
| **01.04.022 முதல் 31.03.2023 வரை** | **ரூ. 7,60,350/-** |

இந்நிலையில் 15.09.2023 பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரிசை எண்: 2-ல் கண்ட திரு. B.தங்கப்பெருமாள் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ:10,80,000/- உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இத்தொகை 142%

கூடுதலாக உள்ளது. அத்துடன் குத்தகை இனத்திற்கு தற்போது குத்தகை தொகையுடன் 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி குத்தகைதாரரால் கூடுதலாக செலுத்தும் நிலை உள்ளது. மேலும், நகராட்சி மூலம் வசூல் மேற்கொள்ளும் போது வசூல் தொகையில், பணியாளர் ஊதியம் மற்றும் மின் கட்டணம் உள்ளிட்ட செலவினங்கள் மேற்கொள்ளப்படுகிறது. இவற்றை அனைத்தையும் கருத்தில் கொண்டு நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு துறை வசூலை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் மேற்கண்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3067/2023/அ3)**

**தீர்மான எண்**: 605

**தீர்மானம்:** தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

மறு ஏலம் விடலாம்.

<u>**பொருள் 10**</u>:-

**தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து அடித்தளம் செகண்டரி பிளாக் தெற்கு பக்க (திருப்பூர் பேரூந்து நிறுத்தம் அருகில்) கட்டணக் கழிப்பறை கட்டணம் வசூலிக்கும் உரிமம்** குத்தகை இனத்திற்கு 18-08-2023 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்து கொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து அடித்தளம் செகண்டரி பிளாக் தெற்கு பக்க (திருப்பூர் பேரூந்து நிறுத்தம் அருகில்) கட்டணக் கழிப்பறை</u>**

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்ளி தொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (ஓராண்டிற்கு) |
|---|---|---|---|
| 1) | P.காமேஷ்<br>தேனி. | - இல்லை - | **ரூ : 2,02,500/-** |

<u>அலுவலக குறிப்பு</u> :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு வரிசை எண்:1-ல் கண்ட திரு.P.காமேஷ் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ: 2,02,500/- உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட குத்தகை இனத்தினை தொடர்ந்து நடத்திட இயலவில்லை என தெரிவித்து குத்தகைதாரரால் இரண்டாம் ஆண்டுடன் ஒப்படைப்பு செய்யப்பட்டு, 30-04-2023 முதல் நகராட்சி மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது, மேலும் 18-04-2023, 06.06.2023, மற்றும் 09.08.2023 ஆகிய தேதிகளில் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. தற்போது திரு.P.காமேஷ் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ: 2,02,500/- கோரியுள்ளார். மேற்கண்ட

குத்தகை இனத்திற்கு தற்போது குத்தகை தொகையுடன் 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி குத்தகைதாரரால் கூடுதலாக செலுத்தும் நிலை உள்ளது. மேலும், நகராட்சி மூலம் வசூல் மேற்கொள்ளும் போது குறைவான தொகையே வசூல் ஆவதாலும், பணியாளர் ஊதியம் மற்றும் மின் கட்டணம் உள்ளிட்ட செலவினங்களை கருத்தில் கொண்டு நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2896 /2023/ அ3)**

**தீர்மான எண்**: 606

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 11</u>:-**

தேனி -அல்லிநகரம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் MINI KITTACHI பழுது பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 01 | Raj Engineering Works,<br>Dindigul Road, Batlagundu | 2,89,900/- |
| 02 | Periyandavar Engineer,<br>Dindigul Road, Batlagundu. | 3,49,870/- |
| 03 | J.REngieering works, Madurai road,<br>Batlagundu, Dindugal | 3,58,130/- |

மேற்படி பணிக்கு வரிசை 1-ல் குறிப்பிட்டுள்ள Raj Engineering Works, Dindigul Road, Batlagundu, நிறுவனம் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1308/2022/எச்2)**

**தீர்மான எண்**: 607

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 12:-**

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவு பணியாளர்கள் மற்றும் குடிநீர் பணியாளர்கள், அனைத்து அலுவலக உதவியாளர், வாகன ஓட்டுநர்கள், நகர்நல செவிலியர்கள் ஆகிய சீருடை பணியாளர்களுக்கு 2023-2024-ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்குவதற்கும், பொது சுகாதாரப்பிரிவு பணியாளர்களுக்கு 2023-2024-ம் ஆண்டிற்கான காலணிகள் வழங்குவதற்கும் தமிழ்நாடு அரசு நிறுவனம் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலமாக வாங்கி வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.2.00/- லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி அனுப்பப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

தமிழ்நாடு அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலமாக வாங்கி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2560/2022/எச்1)**

**தீர்மான எண்**: 608

**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 13:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பிடம் மற்றும் வளாகங்களை சுத்தம் செய்து சுகாதாரமாக பராமரிக்க கடந்த 30.06.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு Sword Man Power Agency, Theni நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்த காலம் வருகின்ற 31.08.2023-ம் தேதியுடன் முடிவடைகிறது. தொடர்ந்து பள்ளிகளை சுத்தமாக பராமரிக்க வேண்டியுள்ளதால் மேலும் ஓராண்டு (01.09.2023 முதல் 31.08.2024 வரை) காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் மேற்கண்ட நிறுவனம் மூலம் தூய்மை பணி மேற்கொள்ள ஒப்பந்த பணி நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.967/2022/எச்2)**

**தீர்மான எண்**: 609

**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 14:-**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2023 – 2024- ம் ஆண்டு முதலமைச்சர் காலை உணவு திட்டம் நகராட்சிக்கு சொந்தமான 10 பள்ளிகளில் 25.08.2023ல் செயல்படுத்தும் வகையில் பள்ளி குழந்தைகள் அனைவரும் உணவு உண்பதற்கான 584 தட்டுகள், 587

டம்லர்கள், 20 கரண்டிகள், 10 பவுல்கள் மற்றும் 10 ஸ்பூன்கள் போன்றவை V.V.G Store ல் கொள்முதல் செய்து பயன்படுத்திய வகையில் செலவினத் தொகை ரூ.72543/-ஐ நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண்: 17404/2022/மாந./அ-2 நாள் : 29.08.2022 ல் அளிக்கப்பட்ட திட்டச் செயலாக்க நெறிமுறைகளின் படியும் தமிழ்நாடு நகராட்சி உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7) ன் படியும் நகராட்சி கல்வி நிதியில் இருந்து வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மிக முக்கியமான திட்டத்தினை குறிப்பிட்ட காலத்தில் செயல்படுத்திட வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை அனுமதிக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**)ந.க.எண்: 981/ 2023 / இ1)**

**தீர்மான எண்**: 610

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 15</u>:-**

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட விரிவாக்கப் பகுதியில் புதியதாக 115 எண்ணம் LED தெருவிளக்குகள் அமைக்கும் பணியினை ரூ.12.92 இலட்சம் மதிப்பீட்டில் 2021 – 2022-ம் ஆண்டு 15வது நிதிக்குழுத் ( Untied Grant ) திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்காணும் திட்டப் பணிக்கான மதிப்பீட்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் தேனி அலுவலகம் மூலம் பணிகள் மேற்கொள்ளுவதற்கான செலவினத்திற்கு ரூ.3.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் மேற்காணும் பணிக்கு முதற்கட்டமாக நகரின் மேற்குப் பகுதியில் பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு கட்டணமாக தமிழ்நாடு மின்சார வாரியம் தேனி அலுவலகத்திற்கு ரூ.2.39 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ள கிழக்கு, வடக்கு மற்றும் நகர் பகுதியில் புதிதாக வயரிங் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டப் பணியினை முழுமையாக முடிவுற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வருவதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியம் தேனி அலுவலகத்திற்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டு கட்டணம் செலுத்த வேண்டியது இருப்பதால் அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**) ந.க.எண்: 3258 / 2021/ இ1)**

**தீர்மான எண்**: 611

**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 16:-**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2023 – 2024-ம் ஆண்டு 15வது நிதிக்குழுத் ( Tied Grant ) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் திட்டப்பணிகள் குறித்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலகம் மூலம் நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு தினமலர் நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண் .MD 23409593, நாள்.08.08.2023-ன்படி ரூ .13608/ - வழங்க கோரப்பட்டுள்ளது .

அதன்படி, மேற்காணும் தொகை ரூ.13608/-ஐ தினமலர் நாளிதழ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**) ந.க.எண்: 163 / 2018 / இ1)**

**தீர்மான எண்**: 612

**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 17:-**

**2023-2024-ம்** ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு- )சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் Jet Rodding Vehicle (T.N. 60. AE 2008க்கு மேலும் தற்போது மழைக்காலம் .ம் தேதியுடன் தகுதிச் சான்று முடிவடைகிறது 26.10.2023 துவங்கிய நிலையில் மேற்படி வாகனத்த ின் தேவையினை கருத்தில் கொண்டு உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரி உரிய காலத்திற்குள் வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறும் பணியினை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.2.00/- இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலககுறிப்பு** அ மன்றம் அனுமதிக்கலாம் (

ஆ நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ( ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்திரவு வழங்க மன்றம் .அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2914/2023/இ2)**

**தீர்மான எண்**: 613

**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 18</u>:-**

தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட குடிநீர் திட்டம் மற்றும் பாதாள - சாக்கடை திட்டத்தில் செயல்பட்டு வரும் உயர் மின்னழுத்த மின் இணைப்புக ளுக்கு ) HT Services) **உதவி மின் ஆய்வாளர் திண்டுக்கல்** , அவர்களால் ம் தேதி26.07.2023 மேற்படி நேராய்வின் அறிக்கையில் கடிதம் எண் . நேராய்வு செய்யப்பட்டது DGL7005/AEI/DGL/Reg.32/2023 நாள் 07.08.2023:ன் படி கீழ்கண்ட உயர் மின்னழுத்த மின் இணைப்புகளுக்கு பாரமரிப்பு பணிகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டியது அவசியம் என தெரிவித்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தவறும்பட்சத்தில் மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

| **வஎண்.** | **மின் இணைப்பு எண்** | **இடம்** |
|---|---|---|
| 1. | 059094760084 | பாதாள சாக்கடை திட்டம் சுத்திகரிப்பு நிலையம்கருவேல் நாயக்கன்பட்டி , |
| 2. | 059094760085 | பாதாள சாக்கடை திட்டம் கழிவு நீர் உந்து நிலையம்.பங்களாமேடு , |
| 3. | 059094760090 | குடிநீர் திட்டம் சுத்திகரிப்பு நிலையம் , .குருவியம்மாள்புரம் |
| 4. | 059094760091 | குடிநீர் திட்டம் இயல் நீரேற்று நிலையம் , 2 ).வைகை ஆறு ஆற்றுபடுகைஎண்ணம் ( |

எனவே மேற்படி பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவினம் தொகை ரூ -/9.97இலட்சம் செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2544/2023/இ2)**

**தீர்மான எண்**: 614

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 19</u>:-**

தேனி அல்லிநகரம் நகராட்சி வைகை அணை குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் - , இயக்கப்படும் இயல் நீரேற்று நிலையம்சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையங்களை இயக்குதல் மற் றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணி தற்போது திருமதி ம் தேதி முதல் மூன்று ஆண்டுகள்16.10.2020 தவமணி ஒப்பந்ததாரர்க்கு கடந்த.த.

பணிமேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டு நாளது தேதி வரை பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி பணி 31.10.2023-ம் தேதியுடன் முடிவடைவதால் இப்பணிக்கு தேவையான பணியாளர்கள் தனியார் மூலம் பெறுவதற்கு உரிய பிரேரணை தயார் செய்யப்பட்டு இவ்வலுவலக கடித ந .நாள் 2இ/2021/2927 .எண்.க. 22.11.2021ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு , சென்னை , நகராட்சி நிர்வாக இயக்குநர் . உத்தரவு எதிர்நோக்கப்பட்டு உள்ளது அலுவலகத்தில் தொடர்பு கொண்டு கேட்டபொழுது இரண்டு அல்லது மூன்று மாதங்களில் உரிய உத்தரவு வழங்கப்படும். அதுவரை பணியின் அவசியம் கருதியும் தற்பொழுது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் திரு. T தவமணி மூலம் ஏற்கெனவே அளித்து . வரும் அதே ஒப்பந்தப்புள்ளி விலைக்கே நவம்பர் 2023 முதல் பிப்ரவரி202 4-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும் வரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிகள் நடைமுறைப்படுத்த தெரிவிக்கும் பட்சத்தில் அதன்படி மேற்கொள்ளவும் ,நான்கு மாதங்களுக்கான செலவினம் மாதம் ரூ 7.03 இலட்சம் வீதம் ரூ 28.12 இலட்சம் செலவின த்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.650/2021/இ2)**

**தீர்மான எண்**: 615

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 20</u>:-**

தேனி 01 . அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் -முதல் 33 வரையிலான பகுதிகளில் குடிநீர் சப்ளை செய்யும் பராமரிக்க போதிய பணியாளர்கள் (Valve Operator இல்லாததால் தனியார் மூலம் பராமரிப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ( மேலும் குடிநீர் சப்ள . பராமரிக்கப்பட்டு வருகிறதுை செய்யும் பணிக்கு தேவையான பணியாளர்கள் தனியார் மூலம் பெறுவதற்கு உரிய பிரேரணை தயார் செய்யப்பட்டு இவ்வலுவலக ந 22.11.2021 .நாள் 2இ/2021/2927 .எண்.க.-ன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்தரவு எதிர்நோக்கப்பட்டு , நகர .உள்ளது ாட்சி நிர்வாக இயக்குநர் சென்னை ,அலுவலகத்தில் தொடர்பு கொண்டு

கேட்டபொழுது இரண்டு அல்லது மூன்று மாதங்களில் உரிய உத்தரவு வழங்கப்படும். அதுவரை பணியின் அவசியம் கருதியும் தற்பொழுது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் திரு . Tதவமணி மூலம் ஏற்கெனவே அளித்து . வரும் அதே ஒப்பந்தப்புள்ளி விலைக்கே நவம்பர் 2023 முதல் பிப்ரவரி202 4 க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும் வரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிகள் நடைமுறைப்படுத்த தெரிவிக்கும் பட்சத்தில் அதன்படி மேற்கொள்ளவும் ,நான்கு மாதங்களுக்கான செலவினம் மாதம் ரூ 3.2 இலட்சம் வீதம் ரூ 012.8 இலட்சம் 0 உத்தரவிற்கு .செலவினத்திற்கும் அனுமதி கோரப்படுகிறது

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2426/2021/இ2)**

**தீர்மான எண்**: 616

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**பொருள் 21**</u>:-

தேனி அல்லிநகரம் நகராட்சி முல்லை ஆற்றில் அமைந்துள்ள -Infiltration Well-ல் உள்ள மண் கழிவுகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Flaculater-ல் படிந்துள்ள கழிவுகளை அகற்றும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வஎண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) வரிகள்) (நீங்களாக | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை வரிகள்) (ரூ) (நீங்களாக | மதிப்பீட்டை விட கூடுதல்குறைவு/ சதவீதம் |
|---|---|---|---|---|
| .1 | திரு.த.தவமணி ஒப்பந்ததாரர், தேனி. | 476366.00 | 47624800. | 0.02% குறைவு |
| .2 | திரு.வைகை ஹைட்ராலிக் இன்ஜினியரிங், ஒப்பந்ததாரர், தேனி. | | 47672000. | 0.07 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கோரிய திரு . த. தவமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2189/2023/இ2)**

**தீர்மான எண்**: 617

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 22:-**

தேனி அல்லிநகரம் நகராட்சி -வார்டு எண். 32 மதுரை ரோடு முதல் அரண்மனைப்புதூர் முல்லை ஆறு வரை உள்ள குடிநீர் விநியோகம் செய்யப்படும் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை புதிதாக மாற்றி அமைக்கும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வஎண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) வரிகள)஁ நீங்களாக( | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை வரிகள்) (ரூ) (நீங்களாக | மதிப்பீட்டை விட கூடுதல்குறைவு/ சதவீதம் |
|---|---|---|---|---|
| .1 | திரு. எஸ். மாணிக்கம் ஒப்பந்ததாரர், தேனி. | 242566.00 | 24222500. | 0.14% குறைவு |
| .2 | திரு. என். வேல்முருகன் ஒப்பந்ததாரர், தேனி. | | 25317200. | 4.37 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கோரிய திரு . எஸ். மாணிக்கம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (**ந .எண்.க.21702இ / 2023 /** )

**தீர்மான எண்**: 618

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 23:-**

தேனி அல்லிநகரம் நகராட்சி -வைகை அணை புதிய குடிநீர் திட்டத்தில் இயல் நீரேற்று நிலையம் Raw Water Pumping Station ல் 400 mm DI பைப்பில் புதிதாக Surge Control Valve, Non Return Valve மற்றும் Air Valve புதிதாக மாற்றி அமைக்கும்

பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| **வஎண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) வரிகள்) (நீங்களாக** | **ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை வரிகள்) (ரூ) (நீங்களாக** | **மதிப்பீட்டை விட கூடுதல்குறைவு/ சதவீதம்** |
|---|---|---|---|---|
| .1 | திரு. த.தவமணி ஒப்பந்ததாரர், தேனி. | 681599.83 | 68153900. | 0.01% குறைவு |
| .2 | திரு.வைகை ஹைட்ராலிக் இன்ஜினியரிங், ஒப்பந்ததாரர், தேனி. | | 68279000. | 0.17 % அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கோரிய திரு . த. தவமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந .எண்.க.21692இ / 2023 / )**

**தீர்மான எண்**: 619

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 24</u>:-**

தேனி அல்லிநகரம் நகராட்சி -வார்டு எண். 26 பாரஸ்ட்ரோடு 5வது தெருவில் இரண்டு இடங்களில் அமைந்துள்ள சின்டெக்ஸ் தொட்டி மற்றும் மேடை பழுதடைந்துள்ளதை சரிசெய்யும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வஎண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) வரிகள்) (நீங்களாக** | **ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை வரிகள்) (ரூ) (நீங்களாக** | **மதிப்பீட்டை விட கூடுதல்குறைவு/ சதவீதம்** |
|---|---|---|---|---|
| .1 | திரு. எஸ். மாணிக்கம் ஒப்பந்ததாரர், தேனி. | 301480.76 | 301434.12 | 46.64% குறைவு |
| .2 | திரு. என். வேல்முருகன் ஒப்பந்ததாரர், தேனி. | | 309926.39 | 2.80 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கோரிய திரு . எஸ். மாணிக்கம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந .எண்.க.23342இ / 2023 / )**

**தீர்மான எண்**: 620

**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் 25:-</u>

தேனி அல்லிநகரம் நகராட்சி -வைகை அணை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 400 KVA மின்மாற்றியில் Winding, Pushing, Male Contact, Female Contact, Oil Changing, Proper Earthing, Gasket மற்றும் Oil Seal மற்றும் மின்மாற்றியில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வஎண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) வரிகள்) (நீங்களாக | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை வரிகள்) (ரூ) (நீங்களாக | மதிப்பீட்டை விட கூடுதல்குறைவு/ சதவீதம் |
|---|---|---|---|---|
| .1 | திரு.வைகை ஹைட்ராலிக் இன்ஜினியரிங், ஒப்பந்ததாரர், தேனி. | 550800.00 | 550270.00 | 0.09% குறைவு |
| .2 | திரு. த.தவமணி ஒப்பந்ததாரர், தேனி. | | 562860.00 | 2.10 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கோரிய திரு . வைகை ஹைட்ராலிக் இன்ஜினியரிங் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந .எண்.க.21302இ / 2023 / )**

**தீர்மான எண்**: 621

**தீர்மானம்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 26</u>:-**

தேனி 1 . அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் -முதல் வரையிலான 33 பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் தனியார் மூலம் பராமரிப்பதற்கு ஒப்பந்தபுள்ளி கோரி M/sஆண்டிபட்ட ,சடையாண்டி ஏஜென்ஸீஸ் .ி நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது மேலும் நகர்ப்பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை .LED விளக்குகளாக மாற்றி பராமரிக்க தேவையான பணியாளர்கள் தனியார் மூலம் பெறுவதற்கு ஒப்பந்தப்ள்ளி பெறப்பட்டு எனவே . அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது 08.02.2023 தெருவ ிளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணி முடிவடையும் வரை தற்பொழுது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் M/s, சடையாண்டி ஏஜென்ஸீஸ் . ஆண்டிபட்டி நிறுவனத்தின் மூலம் ஏற்கெனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலைக்கே அக்டோபர் 2023-மற்றும் நவம்பர் 2023 -இரண்டு மாதத்திற்கு பணி மேற்கொள்ளவும் , அதற்கான இரண்டு மாத உத்தேச செலவினம் ரூ . 5.6 இலட்சம் செலவினத்தை 0 இருந்து ( வருவாய் நிதி ) நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந .எண்.க.120820 / 172இ / )**

**தீர்மான எண்**: 622

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 27</u>:-**

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரை, மற்றும் கம்பம் மெயின் ரோடு பகுதியில் தேசிய நெடுஞ்சாலை துறை மூலம் மேற்கொள்ளும் சாலை விரிவாக்கப் பணிக்கு இடையூறாக இருக்கும் சென்டர் மீடியன் பகுதியான அரசு ITI அருகிலும், நேருசிலை பழைய பேருந்து நிலையம் மற்றும் கம்பம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தெருவிளக்குகளை அகற்றி புதிய இடத்திற்கு மாற்றம் செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் 3 நிறுவனங்கள் கோரிய விலைப்புள்ளி விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளிகோரிய தொகை |
|---|---|---|
| 1 | Vighesh Hydro Electro Mech, Madurai | 607523.00 |
| 2 | Electrical Delimiters Engineers, Madurai | 653087.23 |
| 3 | Ramani Engineering, Madurai. | 637899.15 |

**அலுவலகக்குறிப்பு :-**

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைப்புள்ளி விலை விகிதம் கோரிய **Vighesh Hydro Electro Mech, Madurai** என்ற நிறுவனம் மூலம் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்வதற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.2130/2023/இ1)

**தீர்மான எண்**: 623

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 28:-**

